மோர்தானா அணையை பாசனத்திற்குத் திறக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்,

# பாசனக் கால்வாய்கள் முறையாகத் தூர்வாரப்படாதது கண்டிக்கத்தக்கது!

## கதிர் ஆனந்த் எம்.பி. அறிக்கை!



வேலூர், ஆக. 25 -

மோர்தானா அணையை பாசனத்திற்குத் திறக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பாசனக் கால்வாய்கள் முறையாகத் தூர்வாரப்படாமலும் சுத்தம் செய்யப்படாமலும் இருப்பதை நான் கடுமையாகவும் உறுதியாகவும் கண்டிக்கிறேன் என நாடாளுமன்ற உறுப்பினரும் - வேலூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளருமான கதிர் ஆனந்த் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

மோர்தானா அணையை பாசனத்திற்குத் திறக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பாசனக் கால்வாய்கள் முறையாகத் தூர்வாரப்படாமலும் சுத்தம் செய்யப்படாமலும் இருப்பதை நான் கடுமையாகவும் உறுதியாகவும் கண்டிக்கிறேன்.

குடியாத்தம் அருகே கௌண்டின்யா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மோர்தானா அணை, வேலூர் மாவட்டத்தின் மிக முக்கியமான பாசன ஆதாரங்களில் ஒன்று. குடியாத்தம், கே.வி.குப்பம், காட்பாடி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு இது உயிர்நாடியாக உள்ளது. இந்த அணைநீர்விவசாயிகளுக்கு ஆடம்பரம் அல்ல—அது அவர்களின்வாழ்வாதாரம்.

ஆனால் மீண்டும் ஒரு முறை, விவசாயிகளை காட்டிக்கொடுக்கும் அதே நிர்வாக அலட்சியத்தை நாம் பார்க்கிறோம். நீரைத் திறக்கும் முன்:

- முக்கிய கால்வாய், கிளை கால்வாய்கள் மற்றும் வயற்கால்வாய்களின் பல பகுதிகள் அடர்ந்த சேறு, களைகள், புதர்கள் மற்றும் குப்பைகளால் அடைக்கப்பட்டுள்ளன.

- ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட தூர்வாரும் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் பல முக்கிய இடங்களில் முழுமையடையாமல் அல்லது சரியாகச் செய்யப்படாமல் உள்ளன.

- கடைசி ஏக்கர் வரை நீர் கொண்டு செல்ல வேண்டிய வயற்கால்வாய்கள் இன்னும் புறக்கணிக்கப்பட்டு, புதர் மண்டி, சேறு நிறைந்துள்ளன.

- முழு கால்வாய் அமைப்பும் திறம்பட நீரைக் கொண்டு செல்லத் தயாராக உள்ளதா என்பதற்கு எந்த முழுமையான ஆய்வும் சான்றிதழும் இல்லை.

இந்த நிலையில் அணையைத் திறப்பது ஆட்சி அல்ல - இது முழு அலட்சியம்.

இதன் விளைவுகள் என்னவாக இருக்கும்?

1. அணையில் சேமிக்கப்பட்ட விலைமதிப்பற்ற நீர் சேற்றுக்கால்வாய்கள் வழியாக வீணாகும்.

2. தலைப்பகுதி விவசாயிகளுக்கு மட்டும் நீர் கிடைத்து, வால்பகுதி விவசாயிகள் மீண்டும் வறட்சியில் தவிப்பார்கள்.

3. சேறு மற்றும் புதர் நிறைந்த கால்வாய்கள் உடைந்து, பயிர்கள், வீடுகள் மற்றும் சாலைகள் வெள்ளத்தில் மூழ்கும் ஆபத்து அதிகரிக்கும்.

4. ஏற்கனவே விதை, உரம், உழைப்பு ஆகியவற்றில் முதலீடு செய்த விவசாயிகள் பயிர் இழப்பு மற்றும் கடன் சுமையால் பாதிக்கப்படுவார்கள்.

5. மோர்தானா அணையைப் பராமரித்து மீட்டெடுத்ததன் நோக்கமே தோல்வியடையும்.

இது சாதாரண தொழில்நுட்பப் பிரச்சினை அல்ல. இது வேலூர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தின் மீதான நேரடித் தாக்குதல். அடிப்படை தயாரிப்புப் பணிகளை முடிக்காமல் நீரைத் திறப்பதால் எத்தனை முறை விவசாயிகள் பாதிக்கப்பட வேண்டும்?

நான் உடனடி மற்றும் சமரசமற்ற நடவடிக்கைகளைக் கோருகிறேன்:

1. மோர்தானா அணை பாசன அமைப்பின் கீழுள்ள முழு கால்வாய் வலையமைப்பையும் - முக்கிய கால்வாய், கிளை கால்வாய்கள், விநியோகக் கால்வாய்கள் மற்றும் வயற்கால்வாய்கள் - முழுமையாகவும் தீவிரமாகவும் தூர்வார வேண்டும்.

2. நீர் ஓட்டத்தைத் தடுக்கும் அனைத்து புதர், சேறு, குப்பை மற்றும் ஆக்கிரமிப்புகளையும் அகற்ற வேண்டும்.

3. பணிகள் முடிவடைவதற்கான தெளிவான கால அட்டவணையை வெளியிட்டு, வாரம்தோறும் முன்னேற்ற அறிக்கையை உள்ளூர் விவசாயிகள் பிரதிநிதிகளிடம் அளிக்க வேண்டும்.

4. நீர் திறப்பதற்கு முன் நீர்வளத்துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகள் பிரதிநிதிகள் இணைந்து ஆய்வு நடத்த வேண்டும்.

5. தாமதத்திற்கும் முழுமையற்ற பணிகளுக்கும் பொறுப்பான அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீர்வளத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்திடம் வலியுறுத்துகிறேன்: இந்த ஏமாற்று வேலையை உடனே நிறுத்துங்கள். ஒவ்வொரு கால்வாயும் முழுமையாகச் சுத்தம் செய்யப்பட்டு தயாராகும் வரை அணையைத் திறக்க வேண்டாம். வேலூர் விவசாயிகள் வெற்று அறிவிப்புகளையும் பாதி வேலைகளையும் ஏற்க மாட்டார்கள்.

இந்த அலட்சியம் தொடர்ந்தால் நான் மௌனமாக இருக்க மாட்டேன். நாடாளுமன்றம் உட்பட அனைத்து அளவிலும் இதனை கடுமையாக எழுப்புவேன். விவசாயிகளுடன் இறுதிவரை நிற்பேன்.

மோர்தானா அணையில் சேமிக்கப்பட்டுள்ள நீர் இந்தப் பகுதியின் விவசாயி களுக்குச் சொந்தமானது. அது அவர்களின் வயல்களுக்குச் செல்ல வேண்டும் - அதிகார அலட்சியத்தால் வீணாகக் கூடாது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

தமிழ்நாட்டில்

# பா.ஜ.க. ஆட்சியை நடத்தி வருவது நம்பிக்கை துரோகமில்லையா முதல்வரே!

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!



சென்னை, ஆக. 25 -

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு சமூக வலைதளத்தில் விடுத்துள்ள பதிவு வருமாறு:-

"குறை பிரசவம்" போல் தேர்தலில் வெற்றி பெற்ற த.வெ.க.வை இங்குபெட்டரில் வைத்து ஆளுநர் காப்பாற்றியதால் காங்கிரஸ், விடுதலைச்சிறுத்தைகள், முஸ்லிம்லீக் மற்றும் இடதுசாரி கட்சிகளின் துணையோடு ஆட்சி அமைத்த விஜய், தற்போது RSS சித்தாந்தம் கொண்ட பா.ஜ.க. ஆட்சியை தமிழகத்தில் நடத்தி வருவது நம்பிக்கை துரோகம் இல்லையா CM sir?

இந்தியாவின் அடுத்த பிரதமர் பதவிக்கு "ராகுல் காந்தி தகுதி இல்லை" என்பது போலவும், "அடுத்த பிரதமர் விஜய் தான்" என்றும் சட்டப்பேரவையில் ஒரு அமைச்சர் பேசிய போது காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களும் வெட்கமின்றி மேஜையைத் தட்டி ரசிக்கும் கேவலமான செயலில் ஈடுபட்டதுதான் வேடிக்கை. விஜய்க்கு தேசிய அரசியல் ஆசை காட்டி அவரை முதலமைச்சர் பதவியில் இருந்து நீக்கி அந்த இடத்தை பிடிக்க உங்களோடு இருக்கும் குள்ள நரி கும்பலின் திட்டத்தை அறிவீர்களா CM Sir?

"அரசன் ஒரு முள் செடியை நட்டால் அமைச்சர்கள் முள் காட்டையே உருவாக்கி விடுவார்கள்" என்ற வடஇந்திய பழமொழிக்கு ஏற்ப பொய்களை உண்மை போல் ரீல்ஸ் களாக்கி நீங்கள் தொடங்கி வைத்த செயல், தற்போது அமைச்சர்கள் முதல் த.வெ.க. அடிமட்ட தொண்டர்கள் வரை பரவி எங்கும் ரீல்ஸ் எதிலும் ரீல்ஸ் என்ற நிலை உருவாகி சட்டமன்றத்தில் சபாநாயகரால் நீக்கப்பட்ட வீடியோக்களைக் கூட Fake id மூலம் ரீல்ஸ் விடும் கேவலமான செயலை செய்துவருகிறீர்களே CM sir!

தவெக ஆட்சியில் தமிழக மக்களுக்கு தனியார் மருத்துவமனையில் நோயாளி இறந்தால் மருத்துவ கட்டணம் செலுத்த தேவையில்லை என்றும், பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுவோருக்கு உடனடி மரண தண்டனை என்றும், கோவில் உண்டியல் வருமானத்தில் கல்விக் கூடம் கட்டி மக்கள் பயனடைந்து வருவது போன்றும் பொய்ப் பிரச்சாரங்களை வடமாநிலங்களில், பல நூறு கோடி ரூபாய் செலவில் இந்தியில் ரீல்ஸ் தயாரித்து மக்களிடையே பிரச்சாரம் செய்து குழப்பத்தை ஏற்படுத்தி வரும் த.வெ.க.வின் நரித்தனத்தை இந்தியாவே பார்த்து சிரிப்பதுடன், உங்கள் fake id மூலம் பொய் Reels பரப்புவதை நீதிமன்றம் சென்று தண்டனை வாங்கித்தரவும் மக்கள் தயாராகி வருகின்றனர் CM sir !

இவ்வாறு மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.

---

இந்த நாட்டுக்கே பெரிய கேடான

# த.வெ.க.வை அகற்ற மக்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்!

## முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேட்டி!



சென்னை, ஆக.25 -

சென்னையில் நேற்று, பொதுக்கூட்டம் ஒன்றில் அரசியல் நாகரிகம் சிறிதுமின்றி தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லயோலா மணி, அநாகரிகமாகப் பேசியதை அடுத்து, தம்மைச் சந்தித்த செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ., "இந்த நாட்டிற்கே பெரிய கேடாக அமைந்துள்ள மக்காத குப்பைகளான த.வெ.க.வினரை வருகின்ற காலங்களில் அகற்றுவதற்கு மக்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதியை, "குப்பைகள்" என்று சொல்லுகின்ற அளவிற்கு தரம் தாழ்ந்திருக்கின்ற ஒரு அரசியல் சூழல் இன்றைக்கு நிலவிக் கொண்டிருக்கிறது.

அவர் கூற்றுப்படியே குப்பை என்றாலும் கூட, இது ஆரோக்கியம் உள்ள மக்கும் குப்பை. மக்கும் குப்பை எப்போதுமே உரமாக அடுத்து பயிர்களுக்கு பயன்படும்; பயிர் விளைச்சலுக்கு பயன்படும். மக்கா குப்பை எதற்கும் பயன்படாது. மற்ற உயிர்களைத் தான் பறிக்கும்.

எங்களைப் பொறுத்த அளவில், அவர்கள் சொன்ன பாணியிலேயே சொல்கிறோம்... நாங்கள் குப்பைகள் தான், மக்கும் குப்பைகள்; அவர்கள் மக்கா குப்பைகள். இந்த நாட்டிற்கு பெரிய கேடு. இந்த மக்கா குப்பைகளைத்தான் வருகின்ற காலங்களில் மக்கள் அகற்றுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

---

ஆவணங்களைச் சமர்ப்பிக்க வரும் 31ஆம் தேதி வரை அவகாசம்:

# காஸ் சிலிண்டர் 'இ-கே.ஒய்.சி.' காலக்கெடு நீட்டிப்பு!

## வீட்டில் இருந்தே பதிவு செய்யலாம்!

சென்னை, ஆக. 25-

வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் வாடிக்கையாளர்கள் இகே.ஒய்.சி. சரிபார்ப்பை மேற்கொள்வதற்கான காலக்கெடு மீண்டும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் மூலம் சுமார் 2.40 கோடி வீட்டு எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

உண்மையான பயனாளிகளுக்கு மட்டுமே எல்பிஜி மானியம் மற்றும் சலுகைகள் சென்றடைவதை உறுதி செய்யவும், போலி அல்லது முறைகேடான இணைப்புகளை கண்டறியவும் ஆதார் அடிப்படையிலான இகே.ஒய்.சி. நடைமுறை மேற்கொள்ளப்படுகிறது. ஒன்றிய பெட்ரோலிய அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி, சிலிண்டர் விநியோகிக்கும் போதே டெலிவரி ஊழியர் மூலம் வீட்டில் வைத்து முகத்தை ஸ்கேன் செய்தும் இகே.ஒய்.சி செய்யும் வசதி உள்ளது.

எரிவாயு நிறுவனங்கள் மற்றும் பெட்ரோலியத் துறை அமைச்சகத்தின் சார்பில் நடத்தப்பட்ட ஆய்வில் மாதம் ஒன்றுக்கு 25 லட்சத்திற்கும் அதிகமான வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் இணைப்புகள் தவறாக பயன்படுத்தப்படுவதாக சந்தேகம் எழுந்தது. தமிழகத்தில் ஏராளமான வாடிக்கையாளர்கள் ஏற்கனவே இகே.ஒய்.சி செய்து முடித்துள்ள நிலையில், இன்னும் பதிவு செய்யாதவர்களுக்கு கூடுதல் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இன்று முதல் சிலிண்டர் கிடைக்காது என்ற அச்சம் தேவையில்லை. இருப்பினும், இகே.ஒய்.சி செய்யாமல் நீண்ட காலம் இருப்பதால் வீட்டு உபயோக விலையில் சிலிண்டர் பெறுவதில் சிக்கல் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் எச்சரித்துள்ளன. இகே.ஒய்.சி செய்வதற்காக எரிவாயு அலுவலகத்துக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமில்லை.

சம்பந்தப்பட்ட எண்ணெய் நிறுவனத்தின் செயலி அல்லது அங்கீகரிக்கப்பட்ட முறையில் வீட்டில் இருந்தபடியே சரிபார்ப்பை மேற்கொள்ளலாம். சிலிண்டர் விநியோகிக்கும் ஊழியர் மூலமாகவும் இகே.ஒய்.சி செய்து கொள்ள முடியும். மேலும், எல்.பி.ஜி. சிலிண்டர் முன்பதிவு தொடர்பாக பரவும் தகவல்களில் மக்கள் குழப்பமடைய வேண்டாம். ஒன்றிய அரசின் அதிகாரப்பூர்வ விளக்கத்தின்படி, நகர்ப்புறங்களில் 25 நாட்களுக்கு ஒருமுறையும், கிராமப்புறங்களில் 45 நாட்களுக்கு ஒருமுறையும் சிலிண்டர் முன்பதிவு செய்யும் நடைமுறை உள்ளது.

தேவையற்ற பதற்ற முன்பதிவை தவிர்க்குமாறும் ஒன்றிய அரசு அறிவுறுத்தியுள்ளது. எனவே, இதுவரை இ-கே.ஒய்.சி செய்யாத எல்.பி.ஜி. வாடிக்கையாளர்கள் தற்போது வழங்கப்பட்டுள்ள கூடுதல் அவகாசத்தை பயன்படுத்தி, வரும் 31ம் தேதிக்குள் ஆவணங்கள் சரிபார்ப்பை முடித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

---

கொள்முதலை நிறுத்திய கோ-ஆப்டெக்ஸ்!

# 30 ஆயிரம் பேர் வேலை இழக்கும் அபாயம்!

## ரூ.60 கோடி மதிப்பிலான கைத்தறித் துணிகள் தேக்கம்!

சென்னிமலை, ஆக.25 -

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி ரகங்களை திடீரென கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்வதை நிறுத்தியதால், ரூ.60 கோடி மதிப்பிலான கைத்தறி துணிகள் தேக்கமடைந்துள்ளது. மேலும், 30 ஆயிரம் நெசவாளர்கள் வேலை இழக்கும் அபாய நிலையில் உள்ளனர்.

ஈரோடு மாவட்டம் சென்னிமலை பகுதியில் 35க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகிறது.

இந்த சங்கங்களில் ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் போர்வைகள், படுக்கை விரிப்புகள், திரைச்சீலைகள்,

கால் மிதியடிகள், துண்டுகள், தலையணை உறைகள், தரை துடைக்கும் துணி, பாய் மெத்தைகள், உள்ளிட்ட துணி ரகங்களை உற்பத்தி செய்கின்றனர். நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி ரகங்களில் சுமார் 50 சதவீதத்திற்கு மேல் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்து வந்தது.

தற்போது நெசவாளர்களின் தலையில் இடி விழுந்தது போல் கடந்த 17 2026 முதல் சென்னிமலையில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி ரகங்களை கொள்முதல் செய்வதை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் திடீரென முற்றிலுமாக நிறுத்தி விட்டது. இதனால் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்த ரூ.60 கோடி மதிப்பிலான துணி ரகங்கள் தேங்கி கிடக்கிறது.

இதனால் 30 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் வேலை இழக்கும் அபாய நிலையில் உள்ளனர்.

---

கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை! அன்வர் ராஜா தலைமை!

# தி.மு.க. தலைமை இலக்கிய அணி ஆலோசனைக் கூட்டம்!

## இணைச் செயலாளர் நந்தனம் ச.நம்பிராஜன் அறிவிப்பு!

சென்னை, ஆக. 25 -

தி.மு.க. தலைமை இலக்கிய அணி இணைச் செயலாளர் நந்தனம் ச.நம்பிராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக துணைப் பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி முன்னிலை வகிக்கிறார். இலக்கிய அணி தலைவர் அன்வர் ராஜா தலைமை வகிக்கிறார்.

எல்லோருக்கும் எல்லாம் என்னும் திராவிட மாடல் ஆட்சியின் கழகத் தலைவர் தளபதியாரின் வழியில் கழக முப்பெரும் விழா இவ்வாண்டு பட்டிதொட்டி எங்கும் சிறப்புடன் விழாக்கோலம் பூண்டிட கழக இலக்கிய அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் 28.8.2026 காலை 10:30 மணி அளவில் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமை இலக்கிய அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்டக் கழக இலக்கிய அணி அமைப்பாளர்கள் அனைவரும் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

திருவள்ளூர் மாவட்ட பத்திரிகையாளர் சங்கம் சார்பில்

# மாவட்ட ஆட்சியரிடம் கொடிநாள் நிதி!

திருவள்ளூர், ஆக.25 -

திருவள்ளூர் மாவட்ட பத்திரிகையாளர் சங்கம் சார்பில் முன்னாள் ராணுவப் படை வீரர்களுக்கான கொடிநாள் நிதிக்கான காசோலை, மாவட்ட ஆட்சியர் ச.கவிதாவிடம் சங்க நிர்வாகிகள் வழங்கினர்.

முன்னதாக, மாவட்ட பத்திரிகையாளர் சங்க நிர்வாகிகள் ஆட்சியர் ச.கவிதாவை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்தனர். அதில், திருவள்ளூர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள செய்தியாளர்கள் அறையில் பழுதடைந்துள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரத்தை மாற்றி புதிய இயந்திரம் அமைக்கவும், மேஜை மற்றும் இருக்கைகளை மாற்றி அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் கோரிக்கை விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து, முன்னாள் ராணுவப் படை வீரர்களுக்கு உதவும் வகையில் கொடிநாள் நிதிக்கான காசோலையை சங்க நிர்வாகிகள் ஆட்சியரிடம் வழங்கினர்.

கொடிநாள் நிதி வழங்கிய பத்திரிகையாளர் சங்க நிர்வாகிகளை ஆட்சியர் ச.கவிதா பாராட்டினார்.

நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் எம்.அருள் பிரேம் தாஸ், பொதுச் செயலாளர் என்.உதயகுமார், பொருளாளர் வெங்கடேஸ்வர்லு, ஒருங்கிணைப்பாளர் முரசொலி ஆர்.அண்ணாதுரை, நிர்வாகிகள் சீனிவாசன், சுதாகர், எழில், எம்.ஏ.கருணாநிதி, பாண்டியன், யுவராஜ், இளங்கோவன், விநாயகமூர்த்தி, ரமேஷ், லோகநாதன், நரேஷ், சந்திரசேகர், நவீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---






பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி துர்கா நகரில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்போர் நல்வாழ்வு சங்கத்தின் புதிய அலுவலக கட்டிடத்தை மாவட்டக் கழகத்தின் துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் உறுப்பினருமான இ. கருணாநிதி பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் துணை மேயர் கோ. காமராஜ் மாமன்ற உறுப்பினர் சண்முக சுந்தரி ஜெயக்குமார் பகுதி கழகச் செயலாளர் த. ஜெயக்குமார் பேரூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் இரா. பாபுஜி எஸ். பாலாஜி நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் எஸ். பாலசுப்பிரமணியன் முத்துக்கிருஷ்ணன் கே.எஸ். பாலசுப்ரமணியன் கழக நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் அப்பகுதி வாழ் பொதுமக்கள் உடன் இருந்தனர்.